ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2087/5 - 2018 සැප්තැම්බර් මස 03 වැනි සඳුදා - 2018.09.03

*2087/5 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

தென் மாகாணத்தின் நிதி ஈடுபிடிப்பவர்களின் (திருத்தம்) உபபிரிவு

தென் மாகாணத்தின் முதலமைச்சரும் நிதிப் பொறுப்பு அமைச்சருமான குஸ்திக்னா வடு சான் விஜயலால் டி சில்வா ஆகிய நான் இங்கு வெளியிடப்படுகின்ற 2018 ஆம் ஆண்டின் ...... இலக்க தென்மாகாணத்தின் மாகாண சபையில் நிதி ஈடுபிடிப்பவர்களின் (திருத்த) உபபிரிவு மசோதா இந்த வர்த்தமானி அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து இரண்டு வாரங்கள் முடிவு பெற்ற பின் தென்மாகாண மாகாண சபைக்கு முன்வைக்கப்படும் என்பதை இதனூடாக அறிவிக்கின்றேன். யாருக்காவது இந்த உபபிரிவு அமைப்பில் உள்ளடக்கப்பட்ட விதிகள் சம்பந்தமாக முன்வைப்பதற்கு ஏதும் காரணங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின் அக்காரணங்களையோ, திருத்தங்களையோ இக்காலத்திற்குள் எனக்கு முன்வைக்கலாம்.

**குஸ்திக்னா வடு சான் விஜயலால் டி சில்வா,**
தென் மாகாண முதலமைச்சரும் நிதி ஒதுக்கீடும்,
நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி, போக்குவரத்து,
சுகாதாரம், உள்நாட்டு வைத்தியம், சுற்றுலா மற்றும்
பொறியியலாளர் சேவை அமைச்சர்.

தென் மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
காலி,
*2018, ஒகத்து 29.*

**தென் மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் ...... இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டம்**

தென் மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க தென் மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் திருத்தத்திற்கான நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாணத்தின் மாகாண சபை மூலம் இவ்வாறு சட்டமாக்கப்படுகின்றது :-

1. இந்நியதிச் சட்டம் தென் மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க, தென் மாகாணத்தின் மாகாண சபையின் நிதி (திருத்த) நியதிச் சட்டம் என அழைக்கப்படும். சுருக்கப் பெயர்.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*தென் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 104 (அ) பிரிவைத் திருத்தம் செய்தல்.*

2. (இதில் மேலைக்கு பிரதான நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படும்.) 1992 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தென் மாகாணத்தின் மாகாண சபையின் நிதி (திருத்தம்) நியதிச் சட்டத்தின் 104 (அ) பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக கீழுள்ள பிரிவு கொள்ளப்படும்.

*மாகாண ஊக்குவிப்பு கொடுப்பனவு நிதியத்தினை அமைத்தல்.*

104 (அ) (1) இப்பிரிவின் இதனகத்து 'நிதியம்' என்பது 'மாகாண ஊக்குவிப்பு கொடுப்பனவு நிதியம்' என அழைக்கப்படும் நிதியம் ஒன்றை அமைத்து நடாத்திச் செல்ல வேண்டும்.

*நோக்கம்.*

(2) நிதியத்தினை நடாத்திச் செல்வதன் நோக்கங்கள் கீழ்வருமாறாகும்.

(அ) மாகாண இறைவரி ஆணையாளரினால் நிருவகிக்கப்படும் நியதிச் சட்டம் வினைதிறனான முறையில் உறுதிப்படுத்துவதற்காக திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் ஊக்குவிப்பு நிதியத்தை வழங்கல்.

(ஆ) மாகாண இறைவரி திணைக்களத்தில் உள்ள ஊழியர்களின் நலன்புரி விடயங்களுக்காக தேவையான நலன்புரி நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை வழங்கல்.

*நிதியத்தின் நிர்வாகம்.*

(3) இந்நிதியத்தின் நிருவாகமும் கட்டுப்பாடும் அங்கத்தவர்கள் ஏழு பேரைக் கொண்ட குழுவொன்றினால் நடைபெறவேண்டியதுடன், அக் குழுவினது அங்கத்துவம் பின்வருமாறு அமையப் பெற வேண்டும்.

(அ) தென் மாகாண பிரதான செயலாளர்,

(ஆ) தென் மாகாண ஆளுநரின் செயலாளர்,

(இ) தென் மாகாண பிரதிப் பிரதான செயலாளர் (நிதி),

(ஈ) காலி மாவட்டச் செயலாளர்,

(உ) மாகாண இறைவரி ஆணையாளர் மற்றும்

அவர்களால் விடயத்திற்கு அதிகாரம் வழங்கும் மாகாண இறைவரிச் சேவைப் பிரதி ஆணையாளர்கள் இருவர்களும்

(4) நிதியத்தின் அலுவல்கள் மற்றும் நிருவாகம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது குழுவின் அங்கத்தவர்கள் ஐந்து பேர்களது அனுமதியோடு அத்தீர்மானத்தினை எடுக்க முடியும்.

(5) (அ) தென் மாகாண பிரதான செயலாளரின் பெயரில் அரச வங்கி ஒன்றில் நடைமுறைக் கணக்கு ஒன்றை இந் நிதியத்திற்காக நடாத்திச் செல்ல வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு வருட இறுதியிலும் நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான இறுதிக் கணக்கு தொடர்பான அறிக்கை ஒன்றை நிதியாண்டின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தின் ஆணையாளரால் தயாரிக்கப்பட்டு பிரதான செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*நிதியத்திற்கு நிதி திரட்டும் விதம்.*

(6) ஆரம்ப நிலுவையாக ஒரு லட்சம் ரூபா பணத்தை மாகாண சபை நிதியத்தின் மூலம் இக்கணக்கிற்கு வைப்புச் செய்வதன் மூலம், இக்கணக்கு ஆரம்பிக்கப்படும்.

(7) மாகாண இறைவரி ஆணையாளரினால் நிருவகிக்கப்படுகின்ற தற்போதைய நியதிச் சட்டத்தின் கீழ் மாகாண சபை திரட்டு நிதிக்கு வைப்பிலிடும் வருமானத்தின் கீழே (அ) மற்றும் (ஆ) இனால் விபரிக்கப்படுகின்ற வருமானத் தலைப்பின் கீழ் அதில் குறிப்பிடப்பட்டு உள்ள சதவீதங்களுக்கு ஏற்ப இந்நிதியத்திற்கு மாகாண சபை நிதி மூலம் அரையாண்டுக்கு ஒரு முறை அதில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(அ) மாகாண இறைவரி ஆணையாளரினால் நிருவகிக்கப்படுகின்ற நியதிச் சட்டத்தின் ஏதாவது ஒரு ஏற்பாடுகளுக்கு அமைய யாதாயினும் நபர் ஒருவரால் செலுத்தப்பட வேண்டும் என விதிக்கப்பட்டுள்ள வரி அல்லது கட்டணம் ஒன்றை குறித்த காலத்தில் உரிய முறையில் செலுத்தாவிட்டால் அக்குறித்த வரி அல்லது கட்டணம் வருமானம் ஒன்றாக அறவிடப்படும் சந்தர்ப்பம் ஒன்றிலும்,

மாகாண இறைவரி ஆணையாளர் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் யாதாயினும் நியதிச் சட்டத்தின் கீழ் முன் வைக்கப்பட வேண்டும் என அந்நியதிச் சட்டத்தின் ஊடாக குறித்த அறிக்கையை முன்வைக்காமல் மற்றும் ஏதாவது அறிக்கை ஒன்றை வெளியிட்டு விதிக்கப்பட்டுள்ள சுழற்சி வரி யாதாயினும் அடைவுப் பத்திரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பரிசீலித்துப் பார்க்கையில் உண்மையற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக உறுதியாதல் மதிப்பீட்டாளர் ஒருவரால் செய்யப்படும் மதிப்பீடொன்றும்,

அடைவுப் பத்திரம் ஒன்றுக்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணம் தொடர்பாக 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட கூற்று ஒன்றினூடாக வருமானம் சேர்க்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில்,

அவ்வாறு சேகரிக்கப்படும் வருமானத்தில் பன்னிரெண்டு தசம் ஐந்து வீதம் (12.5 %) உம்,

(ஆ) மாகாண இறைவரி ஆணையாளர் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற யாதாயினும் நியதிச் சட்டம் ஒன்றின் கீழ் விதிக்கப்படுகின்ற அபராதம் மற்றும் தண்டனைகள் மூலம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தின் ஐந்து சதவீதம் (5%)

கணக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) விடயங்களின் கீழ் மாகாண சபை நிதியத்திற்கு வருடாந்தம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற நிதி தொடர்பான ஆவணங்கள் மாகாண இறைவரி ஆணையாளரினால் நடாத்திச் செல்லப்படல் வேண்டும்.

(8) கணக்கின் நிருவாகக் குழுவின் மூலம் கீழ்க் காணப்படும் விடயங்களுக்காக தேவையான தொகைக் கொடுப்பனவிற்காக அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

*நிதியத்தின் மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகள்.*

(அ) நிதியத்தின் ஆரம்பித்த நோக்கத்தைக் அடைந்து கொள்வதற்காக அரையாண்டுக்கு ஒரு முறை மாகாண இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் சம்பளத் திருத்தங்களில் ஏற்படுகின்ற நிலுவை ஊக்குவிப்புக் கொடுப்பனவு.

(ஆ) உத்தியோகத்தர்களின் நலன்புரிக்காகத் தேவைப்படும் பணத்தொகை.

(9) ஒவ்வொரு நிதியாண்டிற்கும் உரிய மேலே (8) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான செலவினங்களை மீள் அளிக்கப்பட்ட பின்னர், 10 இலட்சம் ரூபா அளவிலான பணத்தை நிதியத்தினுள் வைத்துக் கொண்டு மீதியாகும் பணத்தொகையினை வருட இறுதியில் மாகாண வருமான நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

(10) இந்நிதியத்தின் கீழ் நிதிக் கணக்கை அகற்றுவதற்கான காசோலை தேவையானவிடத்து தென் மாகாண பிரதான செயலாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இருவர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

(11) இந்நிதியம் தொடர்பில் ஒவ்வொரு வருடத்திற்குமாக ஒழுங்கமைக்கப்பட்ட இறுதிக் கணக்கு அறிக்கையை 1990 ஆம் ஆண்டில் 07 ஆம் இலக்க நிதி தொடர்பான நியதிச் சட்டத்தின் 102 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்குப் பரிசோதனைக்கு கீழ் நடாத்தப்பட வேண்டும்.

*பொது விடயங்கள்.*

12. (அ) நிதியத்தை நடாத்திச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு உரிய விதந்துரைகள் மாதிரிப் படிவங்கள், திருத்தங்கள் அதனோடு தொடர்பான விடயங்களுக்காக ஆணையாளரின் சிபாரிசின் பேரில் அமைச்சர் அவர்களால் காலத்திற்கு காலம் ஏற்பாடுகள் மேற்கொள்ள முடியும்.

(ஆ) மேலே (அ) கீழ் தயாரிக்கப்பட்ட விதந்துரை ஏற்பாடுகள் அமைச்சர் அவர்களால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படல் வேண்டும்.

3. இந்நியதிச் சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு இடையில் ஏதாவது ஒவ்வாமைகள் ஏற்படின் அவ்வேளையில் சிங்கள மொழியே வலுவுடையதாகும்.

9-422

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.